சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் - கருணை அடிப்படையில் பணி நியமனம்– புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து பணியிடைக் காலமான பணியாளர்களின் பெண் வாரிசுதாரர்களுக்கு மட்டும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-2) துறை,

அரசாணை (நிலை) எண். 48

நாள். 18.08.2021
திருவள்ளுவர் ஆண்டு, 2052
பிலவ, ஆவணி 2

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.163, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி.2) துறை, நாள் 18.08.2010.
2. அரசாணை (நிலை) எண்.30, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந4-2) துறை, நாள் 17.06.2019

மேலும் படிக்கப்பட்டவை:

3. சமூக நல இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 02258/சஉதி1(3)/2021, நாள் 15.02.2021.

ஆணை :-

தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மகளிர், குழந்தைகள், முதியோர் , ஆகிய பிரிவினரின் நலனை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் துறையாகும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் உள்ள சத்துணவு மையங்கள் வாயிலாக 1-ஆம் வகுப்பு முதல் 10 –ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு தினமும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. மாணவ / மாணவியரை தாயுள்ளத்தோடு கவனித்து உணவு சமைத்து வழங்குவது இன்றியமையாதது என்பதன் அடிப்படையில் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏனையவற்றுக்கிடையே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் ஆகிய சத்துணவுப் பணியிடங்களில் மகளிரை மட்டுமே பணி நியமனம் செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஏனையவற்றுக்கிடையே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து பணியிடைக் காலமாகும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ஆண் வாரிசுதாரர்கள் மட்டுமே இருக்கும் நிலையில், அவ்வாரிசுதாரர்களின் கல்வித் தகுதி, வயது வரம்பு, வாரிசுரிமை, குடும்பத்தில் உள்ள பிறர் அரசுப்பணியில் இருப்பது போன்ற விவரங்களை ஆய்வு செய்து சத்துணவு அமைப்பாளர் அல்லது சமையலர் பணிக்கான கல்வித் தகுதி உட்பட ஏனைய தகுதிகளை நிறைவு செய்யும் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க ஏதுவாக அரசாணை (நிலை) எண்.163, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி.2) துறை, நாள் 18.08.2010-இல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பாலின நிபந்தனையிலிருந்து தனியருக்கு விலக்களிக்கக் கோரி உரிய முன்மொழிவுகளை அரசிற்கு அனுப்பி அரசின் முன் அனுமதி பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், சமூக நல ஆணையர் அவர்கள்,பணியிடைக் காலமாகும் சத்துணவு பணியாளர்களின் குடும்பமானது பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகாதவாறு நிவாரணம் அளிக்கும் வகையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு வருகிறது என்றும் அவ்வாறு வழங்கப்படும் கருணை அடிப்படை பணி நியமனமானது உரிமை என கோர இயலாது என்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையானது பெரும்பாலும் பெண்களை கொண்டே செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் சத்துணவுத் திட்டமானது முற்றிலும் பெண்களின் பொருளாதாரத்தை

தபிபா

மேம்படுத்தும் வகையில் நிறுவப்பட்டுள்ளதாகவும் இத்துறையில் பதவி உயர்வுக்கான சாத்தியக்கூறுகள் பெண் பணியாளர்களுக்கு மட்டுமே உள்ளது என்றும் ஆண் பணியாளர்களுக்கு பதவி உயர்விற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற காரணத்தினால், பெண் பணியாளர்கள் பதவி உயர்வு பெறுவது போன்று ஆண் பணியாளர்களும் பதவி உயர்வு கோரி நீதி மன்றங்களில் வழக்கு தொடர்ந்து வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

4. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணிநியமனம் செய்யப்படும் பெண் சத்துணவு அமைப்பாளர்கள் முதுநிலை அடிப்படையில் ஊர்நல அலுவலர் (மகளிர்) ஆக பணி நியமனம் செய்யப்படுகின்றனர். ஊர் நல அலுவலர் (மகளிர்) பணியிடமானது சமூக நலத் துறையில் உள்ள களப் பணியிடமாகும். இப்பணியிடமானது காலமுறை ஊதியத்தின் கீழ் உள்ள முறையான பணியிடமாகும் (Regular Post). இப்பணியிடத்திற்கான விதிகளின்படி மகளிரைக் கொண்டு மட்டுமே இப்பணியிடங்களை நிரப்பமுடியும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் ஆண் சத்துணவு அமைப்பாளர்களை ஊர்நல அலுவலர் (மகளிர்) ஆக பணி நியமனம் செய்ய இயலாது. பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கு ஈடான ஊர்நல அலுவலர் (மகளிர்) ஆக பணி நியமனம் வழங்கப்படுவதாலும் ஆண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கு ஈடான பதவிகளில் பணி நியமனம் வழங்கப்படவில்லை என்பதாலும் நீதிமன்றங்களில் ஆண் சத்துணவு அமைப்பாளர்கள் பல்வேறு வழக்குகளை தொடர்கின்றனர். இதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகிறது.

5. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து வருகையில் பணியிடைக் காலமாகும் பணியாளர்களின் ஆண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு அமைப்பாளர், சமையலர், சமையல் உதவியாளர் ஆக பணி நியமனம் வழங்குவதை மேலே தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் கவனமுடன் அரசு ஆய்வு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது:-

i) அரசாணை (நிலை) எண். 30, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள். 17-06-2019-ல் ஏனையவற்றுக்கிடையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து பணியிடைக் காலமாகும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளருக்கு ஆண் வாரிசுதாரர்கள் மட்டுமே இருக்கும் நிலையில் அவ்வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் சமையலர் அல்லது சமையல் உதவியாளர் பணிநியமனம் வழங்கும்பொருட்டு பாலின நிபந்தனையிலிருந்து விலக்களிக்கக் கோரி உரிய முன்மொழிவுகளை அரசிற்கு அனுப்பி அரசின் முன் அனுமதி பெற்று பணி நியமனம் வழங்கலாம் என்று மேற்காணும் அரசாணையின் பத்தி 4 (IV)-ஐ இரத்து செய்து ஆணையிடப்படுகிறது.

ii) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து பணியிடைக் காலமாகும் பணியாளர்களின் வாரிசுதாரர்களில் பெண் வாரிசுதாரருக்கு மட்டுமே உரிய தகுதிகளின் அடிப்படையில் மேற்காணும் திட்டத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்படும் என்றும் ஆண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க இயலாது என்றும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்,
சமூக நல இயக்குநர், சென்னை – 15.
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை,
தரமணி, சென்னை-113
ஆணையர், சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை-3
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்

நகல் :-
மாண்புமிகு சமூக நலன்- மகளிர் உரிமை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதன்மை செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அ. ஆன் கிலாக்லின்
12/8/2021
பிரிவு அலுவலர்
கோரி
12/8/2021